5. ஐகாரக்குறுக்கம் என்றால் என்ன? சான்றுடன் விளக்குக.

6. பொற்கொல்லன் செய்த சூழ்ச்சி யாது? விளக்குக.

7. வினையெச்சம் என்றால் என்ன? சான்று தருக.

8. பாண்டிய நாட்டின் வளம் யாது? அதை முத்தொள்ளாயிரம் எவ்வாறு எடுத்துரைக்கிறது?

9. "நற்றாமரைக் கயத்தில்" என்ற மூதுரை பாடலை எழுதுக.

10. பின்வரும் குறட்பாக்களை அடி பிறழாமல் எழுதுக.

அ. "செல்வத்துள் செல்வம்" எனத் தொடங்கும் குறள்.

ஆ. "செய்து விடல்" என முடியும் குறள்.

**X. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றினைப் பற்றி ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.** **1 x 10 = 10**

1. தமிழ்மொழி
2. பெருந்தலைவர் காமராசர்
3. இந்திய விடுதலைப்போரில் தமிழகத்தின் பங்கு.

# பருவத் தேர்வு - 1

## மகிழ்ச்சி - எட்டாம் வகுப்பு

மதிப்பெண்கள் : 100 காலம் : 3 மணி

---

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **5 x 1 = 5**

1. மேல் உதடும், கீழ் உதடும் பொருந்துவதால் பிறக்கும் எழுத்துகள் ________________.

அ. க், ங் ஆ. ப், ம் இ. ர், ல் ஈ. ற், ன்

2. ஐகாரத்திற்குரிய மாத்திரையின் அளவு _______________.

அ. ஒன்று ஆ. கால் இ. அரை ஈ. இரண்டு

3. "வலம் வந்தான்" என்பது ________________.

அ. மகரக்குறுக்கம் ஆ. ஆய்தக்குறுக்கம்
இ. ஐகாரக்குறுக்கம் ஈ. ஔகாரக்குறுக்கம்

4. செவ்வாம்பல் மலர்களின் நிறம் ____________.

அ. மஞ்சள் ஆ. அரக்கு
இ. சிவப்பு ஈ. வெள்ளை

5. பாண்டிய மன்னனின் வெண்கொற்றக் குடையில் __________ இருந்தன.

அ. செவ்வாம்பல் ஆ. யானைகள்
இ. சங்குகள் ஈ. முத்துகள்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** **5 x 1 = 5**

1. திணை என்பதன் பொருள் _______________.

2. ______________ கேட்டறிய வேண்டும்.

3. குமரகுருபரர் பிறந்த மாவட்டம் _________________.

4. பெயரெச்சம் ______________ வகைப்படும்.

5. "எவ்வம்" என்ற சொல்லின் பொருள்______________.

## III. பொருள் எழுதுக. 5 x 1 = 5

1. புன்மை – ________
2. தினை – ________
3. பேதமை – ________
4. வலி – ________
5. நசை – ________

## VI. பொருத்துக. 5 x 1 = 5

| | |
|---|---|
| 1. முல்லை | தரும் வளவன் |
| 2. ற், ன் | காடும் காடு சார்ந்த இடம் |
| 3. மகரம் | பறவை, விலங்கு |
| 4. சுடுசோறு | மேல் வாய், நாவின் நுனி |
| 5. ஐந்தறிவு | வினைத்தொகை |

## IV. பிரித்து எழுதுக. 5 x 1 = 5

1. நானிலம் – ________
2. வெங்கதிர் – ________
3. இழுக்கலுடை – ________
4. மூவேந்தர் – ________
5. பைந்தமிழ் – ________

## V. சேர்த்து எழுதுக. 2 x 1 = 2

1. சிலம்பு + அதிகாரம் = ________
2. பொன் + கொல்லர் = ________

## VII. எதிர்ச்சொல் எழுதுக. 3 x 1 = 3

1. நன்மை x ________
2. மகிழ்ச்சி x ________
3. உறக்கம் x ________

## VIII. சிறுவினாக்களுக்கு விடையளி. (ஏதேனும் பத்திற்கு மட்டும்) 10 x 3 = 30

1. தமிழ்மொழி எவற்றையெல்லாம் போக்க வல்லது?
2. ஐவகை நிலங்கள் யாவை?
3. எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?
4. விவசாயி தன் மகன்களிடம் என்ன கூறினார்?
5. நல்லவற்றை ஏன் கேட்டறிய வேண்டும்?
6. மகரக்குறுக்கம் என்பது யாது? அதன் வகைகள் யாவை?
7. ஒரு செயலை எப்படிச் செய்ய வேண்டும்?
8. தப்ப முடியாத அளவு துன்பத்தை தருவது எது?
9. வினைச்சொல் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
10. கோசாலை என்றால் என்ன? விளக்குக.
11. ஐம்பூதங்கள் யாவை?
12. உணவுச் சங்கிலி ஒன்றை எழுதுக.
13. அன்னப் பறவை எதை தேடிச் செல்லும்?
14. தீமையானது எது? சிறந்தது எது?
15. தொடர் விளக்கை வைத்து கலீலியோ கண்டறிந்தவை யாவை?

## IX. பெருவினாக்களுக்கு விடையளி. (ஏதேனும் ஐந்திற்கு மட்டும்) 5 x 6 = 30

1. “ஓங்கலிடை வந்து” எனத் தொடங்கும் தண்டியலங்காரம் பாடலை எழுதுக.
2. தமிழர்களின் ஓவியக்கலை பற்றி விளக்குக.
3. வல்லின, மெல்லின, இடையின எழுத்துகளின் இடப்பிறப்பை எழுதுக.
4. “தினையளவு போதாச் சிறுபுல்” என்னும் திருவள்ளுவமாலை பாடலை எழுதுக.